**பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு - 2017**

---

பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக்கூற்று, உரிமை மூலதனத்தினால் மாற்றங்கள் கூற்று மற்றும் காசு பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் உபபிரிவுகள் 12 (4) மற்றும் (8) உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இனங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகார சட்டத்தின் 12 (5) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலை கழகங்கள் மானியங்கள் ஆனைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகங்களின் அதிகார சட்டத்தின் 111 ஆம் பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை பல்கலைக்கழகங்கள் மாணியங்கள் ஆணைக்குழுவினால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களை முதலீடுகள் தொடர்பாக பெறவேண்டிய வட்டி ரூபா 306,954 நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2015 ஜுலை 10 திகதி 2/2015 ஆம் இலக்க பெது நிதி சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தி | 2017 மார்ச் 09 திகதி வாகனம் ஒன்று விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 1,126,500 தொகை நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டுமெனினும் அத்தொகை ஆண்டிற்கான ஏனைய வருமானங்கள் என கணக்கீடு செய்திருந்தது. |
| (ஆ) | 2016 மார்ச் 31திகதி 05/2016 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரிவு 3.1.6 | ஒவ்வொரு நிதியாண்டிலும் மார்ச் 17 திகதிக்கு முன்னர் கடந்த ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ் அறிக்கை சமர்பித்தல் 2018 ஜுலை 25 திகதி வரை 04 மாத காலம் தாமதிக்கப்பட்டிருந்தது. |

## 3 நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 72,658,248 இற்கான மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு நேரரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 16,958,489 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 55,699,759 இற்கான அதிகரிப்பு ஒன்றினை காட்டியது. மேற்கூறிய அதிகரிப்பிற்கு ஏனைய வருமானங்கள் ரூபா 6,673,897 அதிகரித்தல் மற்றும் மஹபொல மற்றும் மாணவ உதவிச் செலவுகள் ரூபா 345,654,700 இனால் குறைதல் முக்கியமான காரணமாகியுள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை நிதிமிகையின் வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் 2015 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை நிதி மிகையில் வீழ்ச்சி ஒன்றும் மீண்டும் 2017 ஆண்டு இறுதியளவில் வளர்ச்சி ஒன்றும் ஏற்பட்டிருந்தது எனினும் ஊழியர் ஊதியம் மற்றும் பெறுமானத் தேய்வு என்பவற்றை கவனத்தில் எடுத்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 152,474,415 இற்கான பங்களிப்பு 2017 ஆண்டு இறுதி அளவில் ரூபா 319,284,616 தொகை வரை வளர்ச்சி அடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

**(அ) பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் சேர்க்கப்படல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த 3 கல்வி ஆண்டுகள் தொடர்பாக கவனம் செலுத்திய போது பல்கலைக்கழக கல்விக்காக விண்ணபித்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 2015/2016 மற்றும் 2016/2017 ஆகிய 02 ஆண்டுகளில் முறையே 68,299 தொகை மற்றும் ரூபா 71,106 தொகைகள் ஆக இருந்த போதிலும் பல்கலைக்கழகங்களுக்கு சேர்கப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 29,110 முதல் 30,668 வரை ஆக காணப்பட்டது. இதன் பிரகாரம் பல்கலைக்கழக கல்விக்காக விண்ணப்பித்திருந்த மாணவர்களின் அதிகரிப்பிற்கு ஒப்பாக பல்கலைக்கழகத்திற்கு சேர்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் சிறு அதிகரிப்பொன்று மாத்திரம் அவதானிக்கப்பட்டது.

| | 2013/2014 | 2014/2015 | 2015/2016 | 2016/2017 |
|---|---|---|---|---|
| பல்கலைக்கழக கல்விக்காக விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை | 55,991 | 58,716 | 68,299 | 71,106 |
| பல்கலைகழக கல்விக்காக தகைமை பெற்ற மாணவர் களின் எண்ணிக்கையில் அண்மித்த 02 வருடங்களில் அதிகரிப்பு | | | 9,583 | 2,807 |
| பல்கலை கழகத்திற்கு சேர்பதற்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை | 25,200 | 25,676 | 29,110 | 30,668 |
| பல்கலைக்கழகத்திற்கு சேர்பதற்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் அண்மித்த 02 வருடங்களில் அதிகரித்தல் | | | 3,434 | 1,558 |
| பல்கலைகழக கல்விக்காக விண்ணபித்த மாணவர்களின் எண்ணிக்கையில் பல்கலை கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை சதவீதமாக | 45 | 43.7 | 42.6 | 43.1 |

**(ஆ) உள்நாட்டு மாணவர்கள் சேர்த்த பின்னர் ஏற்படும் வெற்றிடங்கள்**

ஆணைக்குழுவினால் பல்கலைக்கழகங்களுக்காக ஆண்டு தோறும் மாணவர்கள் சேர்க்கும் போது பல்வேறு பாடநெறிகளுக்காக தகைமைகள் பெறும் மாணவர்கள் அதே பாடநெறிகளின் கீழ் பதிவு செய்யாமை, பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் வேறு பாடநெறிகளுக்கு மாறுதல், மேலும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கக் கூடாது என பல்கலைக்கழகங்களினால் அறிவித்தல் மற்றும் மாணவ வெற்றிடங்களை நிரப்புவதற்காக அழைப்பு விடுக்கும் சந்தர்பங்களின் எண்ணிக்கையயை வரையறுத்தல் ஆகிய விடயங்கள் மாணவர் வெற்றிடங்கள் ஏற்படுவதற்கு காரணமாகியிருந்தது.

அதன் பிரகாரம் 2013/2014 கல்வி ஆண்டின் போது 1,794 தொகையாக காணப்பட்ட மாணவர் வெற்றிடங்கள் 2015/2016 கல்வி ஆண்டின் போது 2,226 வரை அதிகரிப்பு ஒன்று காணப்பட்ட போதிலும் 2016/2017 கல்வி ஆண்டின் போது மாணவர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 738 வரை குறைந்திருந்தது மாணவர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அழைப்பு விடுக்கப்படும் சந்தர்பங்களின் எண்ணிக்கையை 10 வரை அதிகரிக்கப்பட்டமை மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது.

**(இ) வெளிநாட்டு மாணவர்கள் சேர்த்த பின்னர் ஏற்படும் வெற்றிடங்கள்**

2011 ஜனவரி 25 திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உள்நாட்டு பல்கலை கழகங்களில் வெளிநாட்டு மாணவர்கள் சேர்த்தல் தொடர்பாக 04 கல்வி ஆண்டுகளில் தொடர்பாக தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கல்வி ஆண்டு | திட்டமிட்ட மாணவர்களின் எண்ணிக்கை | தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | வெற்றிடமான மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2013/2014 | 58 | 14 | 44 |
| 2014/2015 | 18 | 9 | 9 |
| 2015/2016 | 38 | 17 | 21 |
| 2016/2017 | 53 | 5 | 48 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) 2016/2017 கல்வி ஆண்டின் போது 5 பாடநெறிகளுக்கு மாத்திரம் வெளிநாட்டு மாணவர்கள் 53 பேர் சேர்ப்பதற்கு திட்டமிட்டிருந்ததுடன் அந்த 05 பாடநெறிகளில் 04 பாடநெறிகளுக்கு 05 வெளிநாட்டு மாணவர்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருந்துடன் மேலும் அந்த 05 பாடநெறிகள் தொடர்பாக 48 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) இதன் பிரகாரம் திட்டமிட்ட வெளிநாட்டு மாணவர்களில் மேலும் காணப்படும் வெற்றிடங்களின் பிரகாரம் மருத்துவ, பொறியியல் போன்ற பிரசித்தமான பாடநெறிகள் தொடர்பாக 13 வெற்றிடங்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் வெளிநாட்டு மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட எண்ணிக்கை மேலும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

2018 மார்ச் 22 திகதி யூஜிசி/983/63 இலக்கங் கொண்ட ஆனைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் பல்கலைகழகங்கள் மானியங்கள் அபிவிருத்தி நிதியத்திற்கு உழைக்கப்பட்ட வருமானத்தில் ரூபா 58 மில்லியன் மாத்திரம் மாற்றுவதற்காக அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 85,996,810 தொகை நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், அதில் வாகன விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 1,011,632 தொகை மற்றும் மீண்டு வரும் மானியங்களில் மிதியாகிய ரூபா 8,581,136 தொகையும் அடங்கியிருந்தன.

**4.3 செயற்பாடு தொழிற்பாடுகள்**

ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் திறன்களில் நிகழ்வு நிலை பாடநெறி 2015/2016 கல்வி ஆண்டின் போது பல்கலைக்கழக அனுமதி பெற்றிருந்த மாணவர்களின் ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்ப தொடர்பான அறிவை வளர்க்கும் குறிக்கோளுடன் முன்னோடி செயற்திட்டமொன்றாக பல்கலை கழகங்கள் மானியங்கள் ஆனைக்குழுவின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தி இருந்ததுடன் அதனது செயற்படுதன்மை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015/2016 கல்வி ஆண்டின் போது பல்கலைகழக அனுமதிக்காக 26,563 மாணவர்கள் பதிவு செய்திருந்ததுடன் மேற்கூறிய முன்னோடி செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட கொழும்பு பல்கலைகழகத்தின் கணிணி கல்வி நிறுவகத்தின் EEA(English For All) பாடநெறி மற்றும் இலங்கை திறந்த பல்கலைகழகத்தின் ITUE (Information Technology for Universities Entrants) பாடநெறி ஆகிய 02 பாட நெறிகள் தொடர்பாக பதிவு செய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 4,997 தொகை மற்றும் 2,012 தொகை ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூலம் நடாத்தப்படும் ITUE பாடநெறிக்காக பதிவு செய்திருந்த 2,012 மாணவர்களில் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து பங்குபற்றிய சான்றிதழ் பெறுவதற்கான தகைமை பெற்றிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 540 பேர் மாத்திரம் காணப்பட்டதுடன் அத்தொகை பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கையில் 26 சதவீதமாகக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(இ) இந்த நிகழ்ச்சி திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் ரூபா 10 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 3 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகையில் ரூபா 1.9 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) முன்னோடி செயற்திட்டம் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்தச் செயற்திட்டம் தோல்வி அடைவதற்கு கரணமாக இந்தப் பாடநெறியை கற்ற மாணவர்களுக்கு கட்டாயப்படுத்தாமை, பல்கலைக்கழக அனுமதிக்கு முன்னர் நிகழ்ச்சி திட்டம் ஆரம்பிக்கப்பட்டு கல்வி அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் பூர்த்தி செய்யாமை ஆகிய பலவீனங்கள் காரணமாக இருந்ததுடன் அந்த பலவீனங்களை தவிர்த்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆக்கபூர்வமான முறையில் பாடநெறிகளை நடாத்துவது தொடர்பாக ஆணைக்குழுவின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 நிதிய குறை பயன்பாடு

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஆனைக்குழுவின் கீழ் நடாத்தப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 43,987,682 தொகைக்கான ஆய்வுகள் மற்றும் 4 விஷேட நிதியங்கள் பல வருட காலமாக ஒவ்வொரு நிதியத்திற்கு உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தாமல் காணப்பட்டது.

(ஆ) ஆணைக்குழுவில் செயற்படாமல் காணப்பட்ட நிதியங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,487,248 தொகைக்கான 17 நிதியங்கள் 2017 ஆண்டிற்கான பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் புலமைபரிசில் நிதியத்திற்கு செலவு வைத்த உடன் அந்த நிதியத்தின் புதிய மீதி ரூபா 13,159,144 தொகையாக காணப்பட்டது. அவ்வாறாயினும், அதன் முலம் 2017 ஆண்டின் போது புலமை பரிசில்கள் வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 222,500 தொகை அதாவது நூற்றின் 1.7 இற்கான தொகை ஒன்று மாத்திரம் என அவதானிக்கப்பட்டது. புலமை பரிசில் நிதியத்தில் இருந்து மீளளிப்பு செய்வதற்காக பல்கலைக்கழகங்களினால் விண்ணப்பித்தலில் தாமதங்களும் இதற்கான காரணமாக இருந்துள்ளது.

(இ) புலமை பரிசில் வழங்குவதற்கான ஆணைக்குழுவினால் பேணப்பட்டிருந்த 12 நிதியங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 12,453,042 தொகையில் 05 நிதியங்கள் தொடர்பான ரூபா 1,053,625 தொகை மாத்திரம் குறிப்பிட்ட விடயத்திற்காக பயன்படுத்தியிருந்தது.

(ஈ) 2017 திசெம்பர் 31 திகதி அளவில் ஆணைக்குழு அபிவிருத்தி நிதியத்தில் காணப்பட்ட ரூபா 101,097,300 இனால் நிதியத்துடன் தொடர்புடைய செலவுகள் ஏதும் மேற் கொண்டிருக்காததும் ஆக்கபூர்வமான விதத்தில் முதலீடுகள் எதிலும் ஈடுபடுத்தியிருக்கவில்லை.

## 4.5 பதவியணி நிருவாகம்

---

ஆனைக்குழுவின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 306 தொகையும், உள்ளவாறான பதவியனியனர் 257 தொகையும் ஆக இருந்ததுடன் வெற்றிடங்களின் எண்ணிக்கை 49 ஆகும் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரேஷ்ட மட்டத்தில் காணப்படும் வெற்றிடங்களிலேயே பிரதான கணக்காளர், உள்ளக கணக்காய்வாளர், உதவி கணக்காளர், உதவி உள்ளக கணக்காய்வாளர் ஆகிய பதவிகள் தொடர்பாக வெற்றிடங்களுக்காக 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் ஆட்சேர்ப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை இந்த பதவிகளில் பிரதான கணக்காளர், உள்ளக கணக்காய்வாளர் ஆகிய பதவிகளின் மூலம் நிறைவேற்றப்படும் கருமங்கள் தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ள கணக்காளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் ஆகிய பதவிகள் மூலம் நிறைவேற்றி கொள்ள இயலுமாகையால் இச் சந்தர்பத்தில் மேற்கூறிய 02 பதவிகளுக்காக ஆள்சேர்ப்பது தேவையில்லை என 2018 ஆகஸ்ட் 24 திகதி தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) 2011 ஆகஸ்ட் 08 திகதி பணிப்பாளர் திட்டமிடல் உட்பட 04 பணிப்பாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை ஆட்சேர்ப்பு நடைபெற்றிருக்கவில்லை 03 பணிப்பாளர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்கள் நிரப்புதல் இந்த சந்தர்பத்தில் தேவையில்லை என இது தொடர்பாக தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

(இ) சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தை சேர்ந்த பதவிகளின் பங்களிப்பு ஆனைக் குழுவின் நிதி மற்றும் நிருவாக விடயங்களுடன் தொடர்புடைய கருமங்கள் மற்றும் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நோக்கி செயற்படுத்தும் போது மிகவும் முக்கியமானது அதனால் தொடர்புடைய பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகள் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினதும் செயற்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வண்டிற்காக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆனைக் குழுவினால் தனது நோக்கெல்லையின் கீழ் வரக்கூடிய கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருந்தனர். அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படகின்றது.

(அ) மேற்கூறியவாறு 2030 நிகழ்ச்சி நிரழ் தொடர்பாக அறிந்திருந்த காரணத்தினால் பல்கலைக்கழகங்கள் ஆனைக்குழுவினால் தனது நோக்கெல்லையின் பிரகாரம் நெருங்க வேண்டிய குறிக்கோள்கள் என நிலைபேறன அபிவிருத்தி குறிக்கோள்கள் என 4 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளின் கீழ் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுடன் நேரடியாக இணைந்த உயர்ந்த தரத்தை உடைய கல்வி ஒன்றினை வழங்கும் குறிக்கோள் இனங்கண்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த நோக்கெல்லையின் கீழ் வரும் ஏனைய குறிக்கோள்கள் இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக அதனோடு தொடர்புபடும் இலக்குகள், அடிப்படைத் தரவுகள், இலக்குகளை நெருங்க வேண்டிய திருப்பு முணைகளை போலவே முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக சுட்டிகளையும் இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் செயற்படுத்துதல் தொடர்பாக பல்கலை கழகங்கள் மானியங்கள் ஆனைக் குழுவின் செய்பணி தொடர்பாக அக்கறை செலுத்தும் தரப்பினர் என இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் ஆகிய தரப்பினர்களை இணங்காண்பதற்கு முடியுமாக இருந்ததுடன் நிறுவனத்தினால் அவர்களை இணங்காண்பதற்காக நடவடிக்கை எடுக்காமையால் நிறுவனத்திற்கு உரிய இலக்குகளை தயாரிக்கும் போது பங்குகொள்ளல் நுழைவு ஒன்றினைச் சித்தரித்து காட்டவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) ஏதேனும் ஒரு விடயத்தின் உண்மையான செயலாற்றுகையை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படை ஒன்று காணப்படல் அத்தியவசியமாக காணப்பட்ட போதிலும், நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நெருங்குதலை அளவீடு செய்வதற்காக சரியான தரவு முறைமை ஒன்றினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிலைபேறான இலக்குகளை நோக்கி நெருங்குவதற்காக நிறுவனத்தினால் இனங்கண்ட கருமங்கள் வருடாந்தத் திட்டத்தில் உட்படுதி இருக்காததுடன் அக் கருமங்களை நிறைவேற்றுவதற்காக தேவையான நிதி வருடாந்த பாதீட்டில் உட்படுத்தியிருக்கவில்லை.

## 6. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த நடவடிக்கை முறை

#### 6.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2006 ஆண்டின் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 4.3.1 (அ) மற்றும் பந்தி 4.3.2 இன் பிரகாரம் புதிய நான்கு மடி கட்டிடத்தின் மூன்று மாடிகள் மற்றும் ஊழிய வளங்கள், கல்வி அலுவல்கள் ஆகிய திணைக்களங்கள் காபட் விரித்தலும் புதிய நான்கு மாடி கட்டிடத்திற்காக தளபாடங்கள் உபகரணங்கள்கொல்வனவு செய்தல் தொடர்பான மொத்த கிரய மதிப்பீடு தயாரித்திருக்கவில்லை.

(ஆ) 2006 ஆண்டின் அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 5.2,5.3.2 மற்றும் 5.6 பந்திகளின் பிரகாரம் புதிய நான்கு மாடிக் கட்டிடத்திற்கு தேவையான தளபாடங்கள் உபகரணங்களின் பெறுகைகளுக்காக விலை கோறல் அழைக்கும் போது பெறுகைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் விடயங்கள் தொடர்பாக உரிய நியமக் குறியீடுகள் விலை கூறல் அழைக்கும் பதிவேடுகளில் உட்படுத்தி இருக்காத போது விலை கூறல் மதிப்பாய்வு செய்யும் சந்தர்பத்தில் அந்த நியமக் குறியீடுகளை நிறைவேற்றியிருக்காமையால் குறைந்த விலை கூறல் இரத்து செய்து கூடிய விலை கூறு பெறுகை ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அதே போல் ஊழியர் வளங்கள், கல்வி அலுவல்கள் மற்றும் சட்ட பிரிவு ஆகிய வற்றிற்கான தளபாட பெறுகை தொடர்பான விலை கூறல் அழைப்பின் போது எதிர்பார்க்கும் மரவகை எவையென விலை கூறல் நியமக் குறியீடுகளை உட்படுத்தியிருக்காத போது சமர்பித்திருந்த குறைந்த விலையை மாத்திரம் கவனத்தில் எடுத்து விலை கூறல் வழங்கப்பட்டிருந்தது.

(இ) பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்திகள் 2.7.5 மற்றும் 2.8.4இன் பிரகாரம் புதிய நான்கு மாடிக் கட்டிடத்திற்கு ரூபா 6,195,848 இற்கான தளபாட உபகரண கொல்வனவு தொடர்பாக பெறுகை குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 8.9.1(அ) இன் பிரகாரம் ஊழியர் வளங்கள், கல்வி அலுவல்கள் மற்றும் சட்டத் தினைக்களத்திற்காக முறையே ரூபா 9,866,500 தொகை கிரயத்தில் தளபாடங்கள் பெறுகை மேற்கொள்ளல் ரூபா 1,298,148 தொகை கிரயத்தில் காபட் விரித்தல் மற்றும் ரூபா 7,629,150 தொகை கிரயம் மேற்கொண்டு அத் திணைக்களத்தினை மறுசீரமைத்தல் ஆகிய பெறுகைக்காக உடன்படிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 8.12.2 இன் பிரகாரம் ஊழிய வளங்கள், சட்டம் மற்றும் கல்வி அலுவல்கள் தினைக்களங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 7,629,150 தொகைக்கான நிர்மான வேலைகள் தொடர்பாக அவ்வாறான வேலைகள் பூர்த்தி செய்யப்படதற்கான சான்றிதழ் ஒன்று வழங்கியிருக்கவில்லை.

(ஊ) பெறுகை வழிகாட்டல் கோவையில் பந்தி 2.14.1 மற்றும் 2017 மார்ச் 15 திகதி மேலதிக 33 இன் பிரகாரம் ரூபா மில்லியன் 5 இற்கும் 10 இற்கும் இடைப்பட்ட பெறுகையின் போது தினைக்கள பெறுகை குழுவின் அங்கீகாரத்தின் மீது கொல்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 6.1 மில்லியனிற்கான புதிய நான்கு மாடிக் கட்டிடத்திற்கான தளபாடக் கொள்வனவு செய்வதற்கான தொடர்பாக கொல்வனவு நியாயமான காரணங்கள் காட்டப்படாமல் 17 பகுதிகளாக பகிரப்பட்டு நிறுவனத் தலைவரின் விதப்புரை மற்றும் அங்கீகாரத்தின் மீது கொல்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 6.1.2 ஒப்பந்த வேலை நிருவாகம்

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் கேற்போர் கூடத்தில் 2015 ஆண்டின் போது நிர்மான வேலைகளில் அலுவல்களில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரர் ஒருவரினால் பெறுகை குழுவின் அங்கீகாரத்துடன் நிர்மான வேலை ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்த வேலைக்கும் புறம்பாக ஆனைக்குழுவின் பூரன அங்கீகாரம் இன்றி மற்றும் பெறுகை நடைமுறைக்கு வெளியே கேற்போர் கூடத்தில் ரூபா 3,393,330 இற்கான மேலதிக வேலை நிறைவேற்றியிருந்தது. எனினும் ஒப்பந்த நிருவாகத்தில் ஏற்பட்டிருந்த குறைபாட்டின் காரணமாக பெறுகை குழுவின் தீர்மானத்தின் மீது அவ் ஒப்பந்த வேலை தொடர்பான கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், ஒப்பந்தகாரரினால் ஆனைக்குழுவுக்கு எதிராக நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு ஒன்றின் தீர்மானத்தின் பிரகாரம் இந்தப்பணம் 2017 மே 08 திகதி ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஊழிய வளங்கள், சட்ட மற்றும் கல்வி அலுவல்கள் தினைக்களங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த அலுவலன வளாகம் ஒதுக்குதல் தொடர்பான தயாரித்திருந்த மதிப்பீட்டில் காணப்பட்ட ரேட்கள், அங்கீகரிக்கப்பட்ட கட்டிட ரேட்கள் (BSR) உடன் பரிசோதனை செய்த போது பொறியியல் மதிப்பீட்டில் உட்படுத்தியிருந்த கணியப் பத்திரத்தின் 02 விடயங்கள் தொடர்பான ரேட்கள் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட ரேட்களை மிகைத்து ரூபா 608 தொகை மற்றும் ரூபா 426 தொகைக்கான மிகை ரேட்கள் உட்படுத்தப்பட்டிருந்தது.

(இ) கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் 2015 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ஒப்பந்தகாரரின் கோரிக்கையின் பேரில் பல சந்தர்பங்களில் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் இறுதியாக 2017 ஏப்ரல் 10 ஆம் திகதி வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் வேலையை பூர்த்தி செய்வதற்காக மேலும் 130 நாட்கள் செலவிடப்படிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆண்டின் போது ஆரம்பமாக நிர்மான வேலை ஒப்பந்த வேலையை வழங்கிய சந்தர்பத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த பொறியியலாளர் மதிப்பீட்டில் உட்படுத்தியிருந்த ஆனால் நிர்மான வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்த ரூபா 11,388,500 தொகை கிரயத்திற்கான 03 விடயங்கள் மீண்டும் 2016 ஆகஸ்ட் 22 திகதி விலைகூறல் அழைக்கப்பட்டு ரூபா 14,987,055 இற்கான பெறுமதிக்கு விலைகூறல் வழங்கப்பட்டிருந்தது அதன் பிரகாரம் கால தாமதத்தின் காரணமாக விலை முரண்கள் காரணமாக ரூபா 3,598,555 இற்கான மேலதிக மதிப்பீட்டு கிரயம் ஒன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ii) அதே போல மேற்கூறிய ஒப்பந்த வேலைக்காக விலை கூறல் அழைப்பு 2016 ஆகஸ்ட் 22 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் தீர்மனத்தின் பிரகாரம் பெறுகை குழுவினால் ஒப்பந்த வேலையை வழங்குவதற்காக 2017 பெப்ரவரி 13 திகதி வரை 175 நாட்கள் காலங் கடத்தப்பட்டிருந்தது.

## 7 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

-----------------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமை மற்றும் கட்டுபாடு குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுபாடு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | செயற்திட்ட கட்டுபாடு | சரியான மற்றும் உகந்த மதிப்பீடு தயாரித்து பொருத்தமான இலக்குகளை நெருங்காமை மற்றும் செயற்திட்ட நிர்மான வேலைகளில் தாமதங்கள் ஏற்படுதல். |
| (ஆ) | பதவியணி நிருவாகம் | பதவியணி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளாமை மற்றும் அலுவல்கள் வினைத்திறன் ஆக்கப்படாமை. |
| (இ) | நிதிய முகாமைத்துவம் | ஒதுக்கீடுகளுக்காக உரிய குறிக்கோள்களுக்காக ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தாமை மற்றும் குறைபயன்படு. |
| (ஈ) | பெறுகை | விலைகூறல் சமர்பிக்கும் போது முத்திரை வைக்கப்பட்ட கவர் ஒன்றில் போட்டு சமர்பிக்காமை. |